DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 96/2026
Miscellaneous :
Sessions : PW 1
Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | தெங்கம்மாள் |
| Father / Husband Name | வெங்கடேசன் |
| Village | அச்சிறுபாக்கம் |
| Taluk | மதுராந்தகம் |
| Age | 40 |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **05.05.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது சிறுகரணையில் வசித்து விவசாயம் வேலை செய்து வருகிறேன். கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு ஒரு நாள் மதியம் சுமார் 1.00 முதல் 1.30 மணியளவில் எனது அப்பா ராகவன் என்பவர் சாரக்கயிறு வாங்குவதற்காக பரத் என்பவருடன் அவரது இருசக்கர வாகனத்தில் மேற்படி பரத் என்பவர் ஓட்ட எனது அப்பா பின்னால் அமர்ந்துகொண்டு அச்சிறுபாக்கம் சென்று சாரக்கயிறு வாங்கிக்கொண்டு வீடு திரும்பும்போது உத்தமூர் அருகே சாலை பணி நடைபெற்றதால் உத்தமூர் கழனி வழியாக வாகனங்களை திருப்பி விட்டனர். அதனால் மேற்படி கழனி வழியாக வரும்போது எதிரே ஜல்லி கலக்கும் வண்டி பின்புறமாக வந்து எனது அப்பா சென்ற இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டது. அதில் எனது அப்பா ஜல்லி கலக்கும் வாகனத்தின் சக்கரத்தில் மாட்டி சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார். மேற்படி பரத் என்பவருக்கு எந்த காயமும் ஏற்படவில்லை. என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் புகாரை நான்தான் கொடுத்தேன். **(அசா1 கொடுத்த புகார் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**2.** மேற்படி விபத்து குறித்து எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் எனது மகள் சொன்னார். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவெண் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்க தெரியாது என்றால் சரிதான். அசாஆ 1 புகாரை யார் எழுதியது என்றால் எனது ஊர்காரர் ஒருவர் எழுதினார். மேற்படி புகாரை எனக்கு படித்து காண்பித்தார்களா என்றால் இல்லை. புகாரில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

தெங்கம்மாள்

Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

5/5/26
Judicial Magistrate No.II
Madurantakam

DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 96/2026
Miscellaneous :
Sessions : PW 2
Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| Name | பரத் |
|---|---|
| Father / Husband Name | மனோகர் |
| Village | சீதாபுரம் |
| Taluk | மதுராந்தகம் |
| Age | 27 |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **05.05.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது சீதாபுரத்தில் வசித்து பெட்ரோல் பங்கில் வேலை செய்து வருகிறேன். கடந்த 04.04.2025 ம் தேதி எனது தாத்தா ராகவன் என்பவருக்கு கொட்டாய் கட்டுவதற்கு கயிறு வாங்குவதற்காக எனக்கு சொந்தமான TN 19BV 3125 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தில் நான் வாகனத்தை ஓட்ட பின்னால் மேற்படி எனது தாத்தா ராகவன் என்பவர் அமரவைத்துக்கொண்டு அச்சிறுபாக்கம் சென்று கயிறு வாங்கிக்கொண்டு வீடு திரும்பும் பொழுது உத்தமநல்லூர் அருகே வரும் போது சாலை வேலை நடந்ததால் மாற்று பாதையில் செல்லும் பொழுது மதியம் சுமார் 1.10 மணியளவில் அஜாக் என்ற கலவை கலக்கும் வாகனம் அதிவேகமாக எங்களுக்கு எதிரே பின்பக்கமாக வந்து நாங்கள் சென்ற வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியது. மேற்படி விபத்தில் எனது தாத்தாவின் மீது மேற்படி வாகனம் மோதி அவர் சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார். நான் இடது புறம் விழுந்ததால் எனக்கு காயங்கள் ஏதும் ஏற்படவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**2.** இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் என்னிடம் இல்லை என்றால் சரிதான். நான் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தின் முன் பகுதி முழுவதுமாக சேதம் அடைந்துவிட்டது என்றால் சரிதான். நான் எந்த மருத்துவமனைக்கும் சென்று சிகிச்சை எடுத்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். நான் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டியதால் தான் மேற்படி விபத்து ஏற்பட்டு ராகவன் என்பவர் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. நான் விபத்து ஏற்படுத்தியதால் தான் மேற்படி எதிரே வந்த வாகனத்தின் பதிவெண்ணை என்னால் சொல்ல முடியவில்லை என்றால் சரியல்ல. இறந்த நபருக்கு இழப்பீடு பெற வேண்டி கொடுக்கப்பட்ட பொய்யான புகாரில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Bharath.

Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.
5/5/26
Judicial Magistrate No.II
Madurantakam

DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 96/2026
Miscellaneous :
Sessions : PW 3
Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | சாமிநாதன் |
| Father / Husband Name | ராமன் |
| Village | சீதாபுரம் |
| Taluk | மதுராந்தகம் |
| Age | 23 |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **05.05.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது சீதாபுரத்தில் வசித்து போட்டோ கிராபராக வேலை செய்து வருகிறேன். கடந்த 04.04.2025 ம் தேதி எனது தாத்தா ராகவன் என்பவர் அச்சிறுபாக்கத்தில் இருந்து சீதாபுரம் செல்லும் சாலையில் உத்தமநல்லூர் அருகே கலவை கலக்கும் இயந்திரம் மேற்படி தாத்தா சென்ற வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டதில் அவர் இறந்துவிட்டார். மேற்படி அவரின் பிரேத்தின் மீது செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் போலிசார் நடத்திய பிரேத விசாரணையில் நான் சாட்சியாக இருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. இறந்தவர் எனக்கு என்ன உறவு என்றால் தாத்தா ஆவார். புகார்தாரர் எனது அத்தை என்றால் சரிதான். விபத்தை நான் நேரடியாக பார்த்தேனா என்றால் இல்லை. போலிசார் இறந்த எனது தாத்தாவின் பிரேத விசாரணைக்காக என்னிடம் கையொப்பம் கேட்டார்களா என்றால் நான் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தேன். இறந்தவர் எனது தாத்தா என்பதால் இழப்பீடு பெற வேண்டி நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

5/5/26

Judicial Magistrate No.II
Madurantakam

DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 96/2026
Miscellaneous :
Sessions : PW 4
Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | பாலாஜி |
| Father / Husband Name | பெருமாள் |
| Village | சீதாபுரம் |
| Taluk | மதுராந்தகம் |
| Age | 22 |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **05.05.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது சீதாபுரத்தில் வசித்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** கடந்த 05.04.2025 ம் தேதி காலை சுமார் 6.00 மணியளவில் போலிசார் உத்தமநல்லூர் கழனி அருகே உள்ள சாலையில் எங்கள் ஊரை சேர்ந்த தாத்தா ஒருவருக்கு முந்தைய நாள் ஜல்லி கலக்கும் வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது சம்மந்தமாக போலிசார் மேற்படி இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து தட்டச்சு செய்து என்னிடம் சாட்சி கையொப்பம் வாங்கினார்கள். என்னுடன் வெங்கட் என்வரும் கையொப்பம் செய்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. எங்கள் ஊருக்கும் விபத்து நடந்த இடத்திற்கும் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் 1 முதல் 1 1/2 கிமீ தூரம் இருக்கும். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன விவரம் எழுதி இருந்தது என்று போலிசார் எனக்கு படித்து காட்டினார்களா என்றால் ஆமாம். நான் கையொப்பம் செய்த தாளில் இருந்த குற்ற எண் சட்டப்பிரிவுகள் மற்றும் வரைபடம் குறித்து என்னால் தெளிவாக சொல்ல முடியுமா என்றால் முடியாது. நானும் என்னுடன் கையொப்பம் செய்த வெங்கட் என்பவரும் போலிசார் கேட்டுக்கொண்டதால் சம்பவயிடத்திற்கு சென்றோம் என்றால் இல்லை. மேற்படி விபத்து நடந்த இடத்தில் போலிசார் விசாரித்த தகவலை தெரிந்து எங்கள் ஊர்காரர்களுடன் நாங்களும் சென்றோம். இறந்தவர் எனக்கு என்ன உறவு என்றால் அவர் எனது ஊர்காரர் ஆவார். புகார் கொடுக்க நான் காவல் நிலையத்திற்கு உடன் சென்றேனா என்றால் இல்லை.இறந்தவர் எனது ஊர்காரர் என்பதால் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு போலிசார் கேட்டுக்கொண்டதால் சம்பவயிடத்தில் கையொப்பம் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

P. Balaji

Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct,

5/5/26
Judicial Magistrate No.II
Madurantakam